**செ. கு. எண்**: 02

## <u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 3.1.2013.</u>

சென்னை பெருநகர காவல், அடையார் போக்குவரத்து பிரிவில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. அன்பு அவர்கள் **25.12.2012** அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், பெரியமேடு போக்குவரத்து பிரிவில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.அச்சுதன் அவர்கள் **25.12.2012** அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், துறைமுக காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்த வந்த திரு.சௌந்தர் அவர்கள் **26.12.2012** அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திருமதி.ஜெயமணி அவர்கள் **27.12.2012** அன்று நெஞ்சுவலி ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை தலைமக் காவலர்கள் திரு. சௌந்தர், திருமதி.ஜெயமணி மற்றும் காவலர்கள் திரு. அன்பு, திரு.அச்சுதன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான தலைமைக் காவலர்கள் திரு. சௌந்தர் மற்றும் திருமதி. ஜெயமணி மற்றும் சாலை விபத்தில் காலமான காவலர் திரு. அன்பு, உடல் நலக் குறைவால் காலமான காவலர் திரு.அச்சுதன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**